ஆறாவது பாடல் தொடக்கம் பதினைந்தாவது பாடல் வரை இத்தகைய பெண்ணின் வேறுபட்ட குண இயல்புகளே கூறப்பட்டுள்ளன.

எனவே, திருப்பாவை ஒருகாலத்துப் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகளை அக்காலத்துப் பெண்ணொருத்தியே வருங்காலப் பெண்களுக்குப் பயிற்றுவதாக அமைந்தது எனக் கருதமுடிகின்றது. பெண்களின் வழிபாட்டு நடைமுறைகள் அவர்களைச் சார்ந்தோர்களையும் அவர்கள் வாழும் சமூகத்துமக்களையும், நன்னிலைப்படுத்தும் என்பதை ஆண்டாள் அனுபவ வாயிலாக அறிந்திருந்தார். திருப்பாவையின் 29ஆவது பாடலில் பெண்களின் வழிபாட்டின் அடிப்படையாக அமையும் இறைபக்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

*"எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோம் ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றுஏல் ஓர் எம்பாவாய்;*

இறைவழிபாட்டிலே பெண்கள் முழுமையாக ஈடுபட வேண்டும் என்னுங் கருத்தையே ஆண்டாள் தன்னுடைய திருப்பாவைப் பாடல்களிலே செறியவைத்துள்ளார். இறைவனுக்கு மட்டுமே பணிந்து வாழ வேண்டுமென்ற ஆண்டாளின் உயர்ந்த கருத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் உலகியல் வாழ்விலே நல்ல கணவனை அடையவேண்டும் என்னும் நோக்கத்திற்காகப் பெண்கள் மார்கழி நோன்பு நோற்பதாக விளக்க முற்படுகின்றனர். இதற்கு ஆண்டாளுக்குப் பின்னர் திருவெம்பாவை பாடிய மாணிக்கவாசகரும் ஒருவகையில் காரணமாகின்றார்.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை அடியொற்றியே பாடப்பட்டுள்ளது. ஆனால் பாடல்களின் எண்ணிக்கை இருபதாக அமைந்துள்ளது. ஆண்டாள் வைணவ வழிபாட்டைப் பாட மாணிக்கவாசகர் சிவ வழிபாட்டைப் பாடுகின்றார். பெயர் நிலையிலும் அவை முறையே திருப்பாவை திருவெம்பாவை என அழைக்கப்படுகின்றன. மாணிக் கவாசகர் தம்முடைய பாடல்களிலே இரண்டு நோக்கங்களை உட்கிடையாக்கியுள்ளார். ஒன்று மழையை வேண்டிப் பாடுவது, மற்றது, இறைவனடியாரோடு வாழவேண்டிப் பாடுதல், திருவெம்பாவையின் 19ஆவது பாடல் ஆண்டாள் காட்டிய பெண்கள் வாழ்வியலையே காட்டுகின்றது.

*"எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்*
*எம்கொங்கை நின் அன்பர் அல்லாதோர் தோற்சேரற்க*
*எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க*
*கங்குல்பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏல்ஓர் எம்பாவாய்"*

இறைவனைப் பணிந்து வாழ்பவருடனே தம் வாழ்வைப் பெண்கள் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதையே ஆண்டாளும் மாணிக்கவாசகரும் தமது பாடல்களிலே கூறிச்சென்றுள்ளனர். மனித வாழ்வுக்கு வழிகாட்ட வல்லது இறை அன்பே. இறைவனைப் பணிந்து வாழும் பயிற்சியை எல்லோருக்கும் கொடுக்க வேண்டியது பெண்களுடைய கடமை என்பதையே திருப்பாவையும் திருவெம்பாவையும் விளக்கியுள்ளன.

எமது எதிர்காலத் தலைமுறையினர்க்கு நல்வாழ்க் கைக்கான பயிற்சியை நாம் தாய்மை உணர்வுடன் அளிக்கவேண்டியுள்ளது. மாணிக்கவாசகர் இறைவன் தாயினும் சாலப் பரிந்து தன்னை ஆட்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தாய் தன்னுடைய குழந்தையின் பசி நேரத்தை முன்கூட்டியே கணித்து உரிய நேரத்தில் பாலூட் டுகிறாள். அவளுடைய அத்தகைய பரிவினைக் காட்டிலும் மேலான பரிவுடன் எம்மை இறைவன் கண்காணிக்கிறார். இந்த அன்புநிலையை முழுமையாக மாணிக்கவாசகர் உணர்ந்திருந்தார். தன்னுடைய தீவினைகளையெல்லாம் அகற்றி வற்றாத ஆனந்தமாய தேனினைச் சொரிந்த சிவனை அவர் கண்டுகொண்டமையால் அந்த உண்மையனுபவத்தைப் பாடல்களாக வடிக்க முடிந்தது. இத்தகைய அனுபவ நிலையை அடைவதற்கு நமது வாழ்வியல் நடைமுறைகளில் இறை உணர்வு மிகுந்திருக்க வேண்டும். இதற்கான பயிற்சியை தாய்தான் ஊட்டமுடியும். எனவேதான் பெண்மையின் சிறந்த குணவியல்பான தாய்மைப் பண்பு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாயிற்று. வழிபாட்டு நடைமுறைகளைப் பேணி எதிர் காலத்தவரும் அதையுணர பயிற்றுகின்ற ஆற்றல் பெண்களிடமிருந்தே வெளிப்படவேண்டும் என்ற இலக்குடனேயே மாணிக்கவாசகர் திருவெம்பாவையைப் பாடியுள்ளார். ஆண்டாள் காட்டிய வழியிலே சென்று பெண்களின் வழிபாட்டு நடைமுறையினைப் பாடல்களிற் பதிவு செய்துள்ளார். எனவே மாணிக்கவாசகருக்கு ஆண்டாள் ஒருவகையில் வழிகாட்டியாய் அமைந்துள்ளார் எனலாம். எனினும் மாணிக்கவாசகருடைய திருவெம்பாவைப் பாடல்களின் தொகை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களின் தொகையுடன் வேறுபட்டுள்ளது. இதற்கு ஒரு காரணத்தைக் கூற முடியும். இளம்பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைத் தொடர்ச்சியாக இருபது நாட்கள்தான் கடைப்பிடிக்க முடியும். அதனால் இருபது பாடல்களாகத் திருவெம்பாவை அமைந்தது எனலாம். ஆனால் ஆண்டாளுடைய முப்பது பாடல் இக்கருத்தை மாற்றுகின்றது. முப்பது நாட்கள் பெண்கள் தொடர்ச்சியாக வழிபாடு செய்ய முடியும் எனக் காட்டுவதாயும் உள்ளது. இன்னும் ஆண்டாள் காலத்திலே முப்பது என்னும் தொகை ஒரு திங்களின் அளவைக் குறித்து நின்றது போலும். மார்கழித் திங்களின் மதிநிறைந்த நன்னாளில் ஆண்டாள் காலத்துப் பெண்கள் மார்கழி நோன்பைத் தொடங்கி முப்பது நாட்கள் கடைப்பிடித்துள்ளனர். ஆண்டாளின்